Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 20 ஏப்ரல் 2021

**நெஸ்லே நிறுவனம் சமூகத்தை மேம்படுத்துவதற்கான வலுவான முயற்சிகளுக்காக சிறந்த வர்த்தக நிறுவன பேண்தகமை விருதுகள் 2020 இல் சமூக உறவுகளுக்கான விருதை வென்றுள்ளது**

*ஒட்டுமொத்தமாக மூன்று சிறந்த வர்த்தக நிறுவன பேண்தகமை விருதுகள் 2020 ஐ தன்வசமாக்கியுள்ளது*

வர்த்தக உலகில் பேண்தகமையை சிறப்பாக வழிநடாத்திச் செல்லும் நிறுவனங்களுக்கு இனங்காணல் அங்கீகாரம் அளிப்பதற்காக இலங்கை வர்த்தக சம்மேளனம் வருடாந்தம் ஏற்பாடு செய்து வருகின்ற நிகழ்வான அண்மையில் இடம்பெற்ற சிறந்த வர்தத்க நிறுவன பேண்தகமை விருதுகள் 2020 இல் சமூக உறவுகளுக்கான விருதை வென்றுள்ளதாக நெஸ்லே லங்காவின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதிலும், விவசாயிகள் முதல் நுகர்வோர் வரை தனது பெறுமானச் சங்கிலி முழுவதும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் அதன் வலுவான நடவடிக்கைகளுக்காக நெஸ்லே நிறுவனத்திற்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் மிகச் சிறந்த 10 வர்த்தக நிறுவனங்களில் ஒன்றாகவும் அங்கீகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் 20,000 க்கும் மேற்பட்ட பாற்பண்ணையாளர்கள் மற்றும் தென்னை செய்கையாளர்கள் மற்றும் தங்களது வீட்டு வளவுகளில் தென்னை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் ஜீவனோபாயத்திற்கு நெஸ்லே பங்களிப்பாற்றி வருவதுடன், கடந்த ஆண்டில் நுண்ணூட்டச்சத்து செறிவூட்டப்பட்ட தயாரிப்புக்களின் 923 மில்லியன் பரிமாறல்களை நுகர்வோருக்கு வழங்கியுள்ளது. இந்நிறுவனமானது தனது Nestlé Healthy Kids Programme நிகழ்ச்சித்திட்டம், Kids Athletics Programme நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கல்வி அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்கும் *Milo* பாடசாலை விளையாட்டு கூட்டாண்மைகள், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்கும் *Nestomalt* மரதனோட்ட நிகழ்வுகள் மற்றும் Choose Wellness Programme நிகழ்ச்சித்திட்டம் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களின் மூலமாக வளர்ந்தோரும், சிறுவர்களும் ஆரோக்கியமானவற்றை உட்கொண்டு, உடற்பயிற்சி மிக்க வாழ்க்கைமுறையை முன்னெடுப்பதற்கு உதவுகின்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களையும் ஆரம்பித்துள்ளது. இளைஞர்,யுவதிகளின் தொழில்வாய்ப்பினை மேம்படுத்த தேவையான திறன்களை அவர்கள் கற்றுக்கொள்ள உதவும் வகையில் 'Nestlé Needs YOUth' என்ற ஒரு வலுவான நிகழ்ச்சித்திட்டத்தையும் நெஸ்லே முன்னெடுத்து வருகின்றது. இந்நிறுவனம் கடந்த ஆண்டில் கல்வி அமைச்சு, மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சி சபைகளுடன் இணைந்து தனது முதலாவது நுகர்வோர் கழிவு முகாமைத்துவச் செயற்திட்டத்தை ஆரம்பித்து, பாடசாலைகளிலிருந்து கழிவுகளை சேகரித்து, பொறுப்புள்ள முறையில் கழிவுகளை அகற்றுவது குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது.

"ஒரு சவாலான சூழலிலும் வணிகமொன்று எவ்வாறு நன்மைக்கான சக்தியாக இருக்கலாம் என்பதை சிறப்பான வெளிக்காண்பிப்பதில் நாம் பெருமிதம் கொள்கிறோம். இலங்கை குடும்பங்களுக்கும் பரந்த சமூகத்திற்கும் அவர்களுக்குத் தேவையான ஆதரவை வழங்குவதற்காக, நாங்கள் நெஸ்லே ஃபெமிலி கிளப்பினை (Nestlé Family Club) ஆரம்பித்துள்ளதுடன், இது இலங்கை குடும்பங்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கை குறித்த மெய்நிகர் ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்குகிறது. மேலும் கல்வி அமைச்சுடன் இணைந்து நாங்கள் முன்னெடுக்கின்ற Nestlé Healthy Kids Programme என்ற நிகழ்ச்சித்திட்டத்தை பாடசாலைகள் மூடப்பட்டிருந்த சமயத்தில் தொடர்ந்தும் சிறுவர்களை உட்டுவதற்கான ஒரு ஏற்பாடாக மின்-கற்றல் வடிவமாக மாற்றிக்கொண்டோம். உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி அர்த்தமுள்ள சூழல் பேணும் பசுமை முயற்சிகள் மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த தயாரிப்புகளை உருவாக்க, ஆரம்ப வணிக முயற்சிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பகிரங்க புத்தாக்க சவால்களையும் நாங்கள் ஆரம்பித்தோம். இந்த முயற்சிகளைச் செயல்படுத்துவது எளிதானது அல்ல, ஆனாலும் மிகவும் உந்துசக்தியளிப்பதாக அமைந்துள்ளன. நாட்டிற்கு நாம் ஆற்றியுள்ள முயற்சிகள் மற்றும் பங்களிப்பிற்காக அங்கீகரிக்கப்பட்டதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்," என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஃபேப்ரிஸ் காவலின் அவர்கள் குறிப்பிட்டார்.

சிறந்த வர்த்தக நிறுவன பேண்தகமை விருதுகள் இலங்கையின் மிக உயர்ந்த நிறுவன மட்டத்திலான கௌரவமாகக் கருதப்படுகின்றன. இது உள்நாட்டு பொருளாதாரம் மற்றும் சமூகத்திற்கு சிறந்த பங்களிப்பினை ஆற்றுகின்ற நிறுவனங்களையும் மற்றும் நிறுவன பேண்தகமையில் சிறப்பாக செயல்படுகின்ற நிறுவனங்களையும் அங்கீகரிக்கின்றது. இதற்கான விண்ணப்பங்கள் மிகவும் நன்மதிப்புப் பெற்ற உள்நாட்டு வல்லுநர்கள், கல்விமான்கள் மற்றும் சிந்தனைச் சிற்பிகளை அடக்கிய குழுவால் மதிப்பீடு செய்யப்படுகின்றன.